# மீன்பிடிப் படகுமீது 'ஹெலி'யிலிருந்து தாக்குதல்
# செம்பியன்பற்று சம்பவத்தில் மீனவர் மூவர் பலி!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 16-8-86 சனி (ஆடி 31 துல்ஹஜ 9) முழக்கம் 193

## படகும் முற்ருக எரிந்தது

செம்பியன் பற்று பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற படகொன்றின்மீது ஹெலிக்காப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் படகு முற்ருக எரிந்ததாகவும் படகிலிருந்த மூன்று மீனவர்களும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது நேற்று முன்தினம் மாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. இம் மீன்பிடிப்படகை நோக்கி கடற்படையினர் முதலில் தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதனுல் படகு கரையை நோக்கிவந்த போது அப்பகுதிக்கு வந்த ஹெலிக்காப்டரிலிருந்து பின்னர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனுல் படகிலிருந்த மீனவரொருவர் கடலிலேயே கொல்லப்பட்டதாகவும் மற்றைய இருவரும் கரையை அண்மித்தபோது ஹெலிக்காப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திஞல் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

# சாம்பல்தீவில் புலிகளின் கனேன் தாக்குதலால் ஐந்து ராணுவத்தினர் பலி; வாகனங்களும் சேதம்

(திருமலை)

திருகோணமலையில் இருந்து நேற்று சாம்பல் தீவு நோக்கி சென்று கொண்டிருந்த ராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியபோது ஐந்து ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், புலிகள் இயக்க போராளிகள் இருவர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ராணுவத்தினர் மூன்று சங்கிலி கவசவாகனங்கள், ஸ்கவுட் கார்களிலும், நடைபவனியாகவும் வந்துகொண்டிருந்தபோது சாம்பல் தீவு பெரிய பாலத்துக்கு அருகில் விடுதலைப் புலிகள் கனேன் சார்ஜினை வெடிக்கவைத்த போது ராணுவத்தில் ஐவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இதனைத்தொடர்ந்து இரண்டு மணி நேரம் இருதரப்பினரும் நேரடி மோதலில் ஈடுபட்டனர். ஹெலிகப்டரும் தாக்குதலில் ஈடுபட்டபோது அதன்மீதும் புலிகள் தாக்குதல் நடாத்தியதால் அது பின்வாங்கியது. இச்சம்பவத்தால் முஸ்லிம் உட்பட சில பொதுமக்கள் காயமடைந்தனர்.

## ஜனுதிபதியின் ஹராரே விஜயம் ரத்தானது!

அடுத்த மாதம் ஹராரேயில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் ஜனுதிபதி ஜெயவர்த்தன கலந்து கொள்ளமாட்டார்.

இனப்பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அவர் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. முன்பு ஜனுதிபதியும் பிரதமர் ராஜீவ் காந்தியும் இங்கு இனப்பிரச்சினை பற்றி பேசவிருந்தது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் பிரேமதாசாவும், வெளிவிவகார அமைச்சர் ஹமீதும் இம் மாநாட்டில் பங்குபற்றுவர். மாநாடு செப்டம்பர் முதல் வாரம் நடைபெறும்.

## 17 ஜே. வி. பி. உறுப்பினர் கைது

காலி பொலிஸ் பகுதியில் பதினேழு ஜே வி. பி. உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்துள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. இவர்களில் ஆறு பேர் பெண்களாவர். இவர்கள் வகுப்புகளை நடாத்தியதாகவும், அரசுக்கு எதிரான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கருகிய 3 சடலங்களுக்கும் வவுனியாவில் மரணச்சடங்கு

(வவுனியா)

வவுனியா, கற்குளத்தில் நேற்றுமுன்தினம் உயிருடன் எரிக்கப்பட்ட லொறிச் சாரதி, கிளீனர், லொறி உரிமையாளர் ஆகியோரின் கருகிய சடலங்கள் நேற்று அவர்களின் வீட்டுக்கு எடுத்துவரப்பட்டு மரணச் சடங்குகள் நடத்தப்பட்டன.

சடலங்கள் அடையாளம் காண முடியாத நிலையிலிருந்ததால், அவை பெட்டிக்குள் வைத்து மூடப்பட்ட நிலையிலேயே சடங்குகள் இடம்பெற்றன.

அனுராதபுரம் பொலிஸார் லொறி எரிக்கப்பட்ட இடத்துக்குச் சென்று சடலங்களை மீட்டு, மரணவிசாரணையையும் ஸ்தலத்திலேயே நடத்தியது குறிப்பிடத்தக்கது.

## பகிஷ்கரிப்பு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், இன்றைய விரிவுரைகளுக்கு பல்கலைக்கழக மாணவர்களை சமுகமளிக்கும்படியும் மாணவர் அமைப்புக் குழு அறிவித்துள்ளது.

★ இரண்டரை மணி நேரம் நடைபெற்ற

# பேச்சுக்களில் முன்னேற்றமில்லை

## 'சொல்வதற்கு எதுவுமேயில்லை' 'அமிர்' விரக்தியுடன் சொன்னுர்

(சிறப்பு நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களுக்கும், ஜனுதிபதி தலைமையிலான குழுவுக்குமிடையே நேற்று இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நூற்றைம்பது நிமிடங்கள் நடைபெற்றபோதிலும் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்று நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

"கடந்த மாதம் நடைபெற்ற பேச்சுக்களிலிருந்து நேற்று பேச்சுவார்த்தையை ஆரம்பித்தோம். குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை. இன்று காலை பத்து மணிக்கு மீண்டும் பேச்சுத் தொடரும்" என்று விரக்தியுடன் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றிரவு தெரிவித்தார்.

வடக்கும் கிழக்கும் இணைந்த மொழி மாநில அமைப்பையே கூட்டணியினர் நேற்று வலியுறுத்தினராயினும், ஜனுதிபதி

—6ம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி சவச்சாலை குளிரூட்டிகள் பழுது; சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது!

யாழ். அரசினர் வைத்தியசாலை சவச்சாலையிலுள்ள இரு குளிரூட்டி இயந்திரங்களும் கடந்த சில நாட்களாக பழுதடைந்துள்ளன. இந்த இரு குளிரூட்டி இயந்திரங்களும் ஆறு சடலங்களை பாதுகாப்பாக வைக்கக்கூடிய வசதியைக் கொண்டவை. இவை பழுதடைந்துள்ளமையினுல் இங்கு வைக்கப்படும் சடலங்கள் விரைவில் பழுதடைந்து துர்நாற்றம் வீசுகின்றன. இதனுல் சவச்சாலைக்கு அருகில் ஊழியர்களோ, பொது மக்களோ செல்லமுடியாதிருக்கின்றது.

இந்த குளிரூட்டி மிகப் பழையதாகையால் இதனைத்

—6ம் பக்கம் பார்க்க

கப்பலும் அடையாளம் காணப்பட்டது

## 152 தமிழரும் மே. ஜேர்மனில் வசித்தது நிரூபிக்கப்பட்டது!

கனடாகடலில் மீட்கப்பட்ட 152 தமிழர்களும் இதற்கு முன்னர் மேற்கு ஜேர்மனியில் வசித்தவர்கள்என்பதுசந்தேகத்துக்கு இடமின்றிநிரூபிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களின் பெயர், விபரங்கள் மேற்கு ஜேர்மனியிலுள்ள அகதிகள் முகாமொன்றில் ஏற்கனவே பதியப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனராம்.

இவர்களை ஏற்றிவந்த கப்பல் பனமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பெயர் 'ஓரிஜஸ்' என்றும் இதற்கும் சீனுவுக்கும் எந்தத்தொடர்புமில்லையென்றும் விசாரணைகள் மூலம் மேலும் தெரியவந்துள்ளது.

ஆனுலும், 152 பேருக்கும் அவர்கள் எங்கிருந்து, எப்படி வந்தவர்கள் என்பதில்அக்கறை செலுத்தாது, அரசியல் புகலிடம் வழங்க கனடா அரசு தீர்மானித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணியும் சாரதியும் காயம்

## கொழும்பு - யாழ் பஸ்ஸுக்கு அனுராதபுரத்தில் கல் வீச்சு

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ் ஒன்று அனுராதபுரத்திற்கு அண்மையில் வைத்து சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸின் மீது காடையர்கள் சுமார் இரண்டு நிமிட நேரம் தொடர்ச்சியாகக் கல் வீசித் தாக்கிய போதிலும் சாரதி அதனைத் திறமையாக ஓட்டி வந்ததால் பெருமளவு

—6ம் பக்கம் பார்க்க

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

ஆவரங்கால் சந்தைக்கு அருகாமையில் 25 பரப்பு தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மல்லிகா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால் புத்தூர். R/24684

### தேவை

அனுபவம் பெற்ற தமிழ் சுருக்கெழுத்தாளர் உடனே தேவை. நகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். முடிவு திகதி: 22-8-86 B/1463 C/o ஈழமுரசு, யாழ்ப்பாணம்.


## குருபூஜை

(சரசாலை)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் சரசாலை சிதம்பர விநாயகர் ஆலயத்தில் மிக அமைதியான முறையில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூஜையைக் கொண்டாடினர். கூட்டுப் பிரார்த்தனையில் சுந்தரர் தேவாரங்கள் பாடப்பட்டன.

## புதிய சித்திரத்தேர்

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு ஸ்ரீ தவளக்கிரி முத்துமாரி அம்பாளுக்கு விசேட புதிய சித்திரத் தேர் ஒன்று மேற்படி ஆலய தேர்த்திருப்பணிச் சபையினரால் உருவாக்கப்பட்டுவருகின்றது.

அதிவேகமாக செய்யப்பட்டு வரும் இப் புதிய சித்திரத் தேரின் வளர்ச்சிக்குப் பலரும் தாராளமாக உதவிவருகின்றனர்.

## மாணவர் போட்டி

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மகோற்சவத்தை முன்னிட்டு, மாணவ மாணவிகளிடையே சமய அறிவை வளர்ப்பதற்காக மண்டைதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் மாணவ மாணவிகளிடையே, மனனப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது. இப்போட்டி எதிர்வரும் 19ந் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவத்தன்று திருவெண்பாவை பாடல்களில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை சங்கத் தலைவி செல்வி. ஞா. நடராசா ஆசிரியை செய்து வருகின்றூர்.

## மகோற்சவம்

(சாவகச்சேரி)

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் ஞாயிறு காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

சிவாகம சோதிட பூஷணம் கல்வயலூர் சிவ ஸ்ரீ சி. சிதம்பரநாத குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும் இந்த மகோற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். 18 ம் திகதி இரதோற்சவமும் 19 ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## குருபூஜை

(சரசாலை)

மட்டுவில் கல்வத்து விநாயகர் ஆலயத்தில் சுந்தர மூர்த்தி நாயனுர் குருபூஜை மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. சுந்தரர் பாடல்கள் காலை முதல் மாலைவரை பாடப்பட்டன.

## மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(நல்லூர்)

யாழ். பரி. யோவான் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் ஜோன்சன் இல்லம் 171 புள்ளிகளைப் பெற்றுச் சாம்பியனுகியது. ஏனைய இல்லங்களான பீற்றே, பாகிற்றர், ஹண்டி, தொம்சன் ஆகிய இல்லங்கள் முறையே 161, 146, 105, 103 புள்ளிகளை பெற்றன.

8 வயதுப்பிரிவில் சம்பியனுக செல்வன் பி டினேஸ்சும், 9 வயதுப் பிரிவில் செல்வன் ரி. ததீஸ்சனும், 10 வயதுப் பிரிவில் செல்வன் எஸ். விமலனும், 11 வயதுப் பிரிவில் செல்வன் எஸ். சுதர்சனும், 12 வயதுப் பிரிவில் செல்வன்கள் பி. உமைமைந்தனும், கே. ஜெயராமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அணிநடைப் போட்டியில் யோன்சன் இல்லமும், 9 வயதுப் பிரிவுக்கான அஞ்சல் ஓட்டப்போட்டியில் யோன்சன் இல்லமும், 10 வயதுப் பிரிவுக்கான அஞ்சலோட்டப் போட்டியில் பீற்றே இல்லமும் 11வயதுப் பிரிவுக்கான அஞ்சலோட்டப் போட்டியில் பாகிற்றர் இல்லமும், 12வயதுப் பிரிவுக்கான அஞ்சலோட்டப்போட்டியில் பீற்றே இல்லமும் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. எல்லாவயதுப் பிரிவுப் பிரிவுகளுக்குமிடையிலான அஞ்சலோட்டப்போட்டிகளிலும் 46 புள்ளிகளைப் பெற்ற பீற்றே இல்லம் காலஞ்சென்ற டி. எம். இராசரத்தினம் ஞாபக வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

போட்டிகளில் வெற்றிபெற்றேருக்கான வெற்றிக் கிண்ணங்களையும், கேடயங்களையும் போட்டிக்கு அதிதியாகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி யே.பி.சி. பிலிப்ஸின் பாரியார் திருமதி பிலிப்ஸ் வழங்கினர்.

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது. ஆரம்பநடவடிக்கையாக இச்சங்கம் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம், தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. மகாசிவம், கல்விச்சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ.கந்தையா ஆகியோரின் உதவியுடன்கல்வியமைச்சரை சந்தித்து இதுவிடயமாக உரையாடுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. இச்சங்கத்தின் தலைவராக வி. ஆ. சிவராசாவும், செயலாளராக ரஞ்சித்தும் பணியாற்றிவருகின்றனர்.

## மாதிரிக் கிராமம்

(பூநகரி)

சர்வதேச வீடமைப்பு ஆண்டையொட்டி அடுத்தாண்டு ஆரம்பத்தில் பூநகரியைச் சேர்ந்த வலைப்பாடு என்னும் கிராமத்தில் 30வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதல் நடவடிக்கையான முப்பது பேர் தெரிவு செய்யப்பட்டு அதற்குரிய காணிகளும் வழங்கப்பட்டுள்ளதாகப் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ்.எஸ் சீவரத்தினம் தெரிவித்துள்ளார். 1987ம் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து

❀ வட்டக்கச்சிசிவக்கொழுந்து மங்கையற்கரசி தம்பதியின் மகன் அன்புக்கரன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றூர்.

❀ கிளாலி ஸ்ரனிஸ்லாஸ் லீலா தம்பதியின் மகள் மேரிஜீவாங்கனி இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றூர்.

❀ யாழ். கஸ்தூரியார் வீதி இரத்தினவேல் புஷ்பமாலா தம்பதியின் மகள் சிவதர்ஸ்சினி இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றூர்.

❀ யாழ். கச்சேரி வீதி குமார் மகேஸ் தம்பதியின் மகள் மேனகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றூர்.

❀ உசன் இளையதம்பி குணமணி தம்பதியின் மகள் கோமதி இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக்கொண்டாடுகின்றூர்.

❀ ஊரெழு மேற்கு தம்பிராசா சரோஜினிதேவி தம்பதியின் மகன் சுதாகரன் இன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றூர்.

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கம் நடத்தும் சைவசமய அறிவுப் போட்டியில் சகலரும் கலந்து கொள்ளலாம் என்றும் நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்டியதாக உள்ள மில்க்வைற் ஸ்தாபனத்தில் ஒரு ரூபா கொடுத்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. விடைப் பத்திரங்களை செப்டெம்பர் 3ஆம் திகதிக்கு முன் மில்க்வைற் ஸ்தாபனத்தில் ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.


## சவூதி அரேபியா, அபுதாபி பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவில் JUBAIL துறைமுகத்தில் (LABOURER) தொழிலாளர் தரத்தில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கு இம்மாதம் 23ந், 27ந் திகதிகளில் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (வயது எல்லை 25—40)

அபுதாபிக்கு Cleaners (கிளீனர்ஸ்) வேலையாக செல்ல விரும்புபவர்களுக்கு 4 கிழமைகளுக்குள் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

(வயது எல்லை 21—30)

சகலரும் பாஸ்போர்ட், 6 படங்களுடன் 18ந் திகதிக்கு முன் நேரில் வரவும்.

முகவரி:-

**K.M. வைத்தீஸ்வரன்,**
கச்சாய் வீதி, கொடிகாமம்.

R/24692

## பிரயாண ஒழுங்குகள்

● கனடா ● ஈராக்
● சவூதி அரேபியா
● டென்மார்க் ● ஜேர்மனி

(1) கனடா, டென்மார், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) மேசன், தச்சுத் தொழிலாளர், எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19-ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

**இ. தேவராசா**
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி அருகாமை) R/24677

## ஆபிரிக்காவில் தொழில் வாய்ப்பு

### விண்ணப்பப்பத்திரம்

மேற்கூறிய நாட்டில் V. S. O. தொழில் நிலையத்தில் பதிவு செய்வதற்காக கீழ் கூறிய தொழில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1986 - 08 - 16 1986 - 08 - 17ஆம் திகதிகளில் கீழ் கூறிய விலாசத்தில் என்னை சந்திக்கவும்.

1) M. L. T. S.
2) Radiographers
3) Electrical Foremen
4) Physotherapist
5) Pharmacist
6) A. M. P.
7) English Teacher (Special)

விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் பேச எழுத தெரிந்து இருக்க வேண்டும். சொந்த எழுத்தில் Half Sheet வடிவத்தில் in Duplicate Biodata வுடன் Passport Size Photograph வுடன் மேற்கூறிய தினங்களில் என்னை சந்திக்கவும். பதிவு செய்து முடிவுற்றவுடன் V. S. O. விண்ணப்பப்பத்திரங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**T. Rajeswaran**
30 / 30, Arulampalam Lane,
Ariyalai,
JAFFNA. R/24693

## பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● டென்மார்க்
● ஜேர்மனி

1. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

மீண்டும் டென்மார்க் பயண ஒழுங்குகள்

2. டென்மார்க்குக்கு எமது முகவர் வாராவாரம் பிரயாண ஒழுங்குகள் செய்து நேரடியாக அழைத்துச் செல்வார்.
3. ஜேர்மன் செல்ல விரும்புவோருக்கு நாம் பிரயாண ஒழுங்குகள் செய்து தருவோம்.
4. சவூதி அரேபியாவுக்கு விவசாயத் தொழிலாளர் (Labourers) மேசன், தச்சுத் தொழிலாளர்கள், எலெக்றிசன்ஸ் ஆகியவற்றிற்குச் செல்லவிரும்புவோர் உடன் பாஸ்போட், 6 புகைப்படங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில். R/24691

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

# நோய் தீர்க்க ஒரேவழி நோயாளியை அழிப்பதா?

(நல்லூர்)

"இச்சிறிய தீவில் நாங்கள் விவரிக்க முடியாத பெருந் துன்பங்கள் நடுவில் வாழ்ந்து வருகிறோம். பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இன்று புற்றுநோய் போல மக்களை அழித்துக் கொண்டே வருகின்றன. பல மருத்துவர் இந்நோயை நீக்கப் பலவித மருத்துவ முறைகளைக் கையாண்டு வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்தும் சிறந்த மருத்துவர் அழைக்கப்பட்டனர். இன்னும் ஒருவராவது இதற்குப் பரிகாரத்தைக்கண்டு பிடிக்கவில்லை. ஒரு சிலர் நோயைத் தீர்க்கும் ஒரேவழி நோயாளியை அழிப்பது என்கின்றனர். இது நோயைத் தீர்க்கும் ஒரே வழியா? அறிவுடையோர் இவ்வழியை ஏற்க மாட்டார்கள் என்பதை நாம் அறிவோம்."

இவ்வாறு, சுன்னுகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரம பிரதம சேவக அருட்திரு. சாம் அல்பிரட் அடிகளார் ஆச்சிரமத்தின் 47வது ஆண்டு விழாவை யொட்டி வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிக்கும் சமாதானத்திற்கும் அபாயங்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன. மனுக்குலம் இன்று போராயுதப் பெருக்கத்தின் இருண்ட சூழ்நிலையில் உள்ளது அநீதி நிறைந்த அமைப்புக்கள், உலகம் முன்பு ஒரு போதும் அறியாத பயங்கரமானமுறையில் பரப்பி வருகிறது. வரலாறு காணுத முறையில் மனித இனம் தன்னைத்தானே அழித்து வருகிறது. அடக்கப்பட்டு தன் பிறப்புரிமைகளை இழந்து எப்பொழுது இந்நிலையிலிருந்து விடுதலை கிடைக்குமென ஏங்கிக் கொண்டிருக்கிறது எனவும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐக்கியநாணய சங்கங்கள் சமூக முன்னேற்றத்திற்கு மிக உறுதுணையானவை

(சுன்னுகம்)

ஐக்கிய நாணய சங்கம் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையானதாகும். வசதியற்றவர்களும், ஏழைகளும் இச்சங்கத்தினுல் பலவித செயற்பாடுகளின் மூலம் மேல்நிலையடையமுடியும். இன்றைய காலகட்டத்தில் இதனது அவசியம் உணரப்பட்டுள்ளது. கையில் பணமில்லாதவராயினும் சுயதொழிலொன்றைப் புரிவதற்கு ஐக்கிய நாணய சங்கம் வசதி செய்து கொடுக்கும் நிலையினையும் நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம்

அச்செழு திருத்தணிகை மகளிர் ஐக்கிய நாணய சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி ருக்மணி ஆனந்தவேல் சங்கத்தின் அவசியம் பற்றியும், இன்றைய காலகட்டத்தில் அது ஆற்றிவரும் பங்களிப்புப் பற்றியும் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதிபர் செல்வி தங்கம்மா நல்லதம்பியின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தினிறுதியில் புது வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. தலைவி த. நல்லதம்பி, உப தலைவி திருமதி ரஞ்சினி லோகநாதன், செயலாளர் திருமதி அன்னலட்சுமி சின்னத்தம்பி. நிர்வாக சபை உறுப்பினராக ஏழுபேர் தெரியப்பட்டனர்.

## நிதி அமைச்சர் சொல்கிறுர்

# அரச கூட்டுத்தாபனங்கள் சரியாக இயங்கவில்லை

அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சில சரியான முறையில் இயங்கவில்லை எனவும், போதிய செயற்பாடுகள் இன்மையாலும் அவை நஷ்டத்தில் இயங்குவதாக நிதியமைச்சர் ரொனி டீ மெல் கூட்டுத்தாபன தலைவர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கில் பேசுகையில் கூறினுர்.

அரசு ஐயாயிரம் கோடி ரூபாவை இவைக்கு முதலீடு செய்தும் ஒரு சதவீதமான குறைவு வருமானமே அரசுக்கு கிடைக்கிறது என்று சொன்ன அமைச்சர், இவற்றை இனி மேல் நடாத்த முடியாதிருப்பதாகவும், உலக வங்கியும், சர்வதேச நாணயப்பிரிவும் இதற்கு நிதியுதவி அளிக்க மறுத்துள்ளதாகவும் எடுத்துக் கூறினுர்.

# நாவாந்துறை மீன் சந்தை விஸ்தரிப்பதற்கு நிதியுதவி

(வண்ணர்பண்ணை)

கோட்டை இராணுவத்தினரின் கெடுபிடியால் யாழ். நகர மீன் சந்தையை வியாபாரிகளும், பாவனையாளர்களும், தொழிலாளர்களும் பயனபடுத்த அச்சம் தெரிவித்துள்ளதையடுத்து நாவாந்துறைச் சநதையை பயன்படுததி வருகின்றனர். இதனுல் இச் சந்தையினை விஸ்தரிப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இச் சந்தைக்கு ஏற்பட்டுள்ள நிலையை நாவாந்துறை முன்னுள் மாநகர சபை உறுப்பினர் திரு. எம். மரியாம்பிள்ளை ஆணையாளரிடம் எடுத்துக் கூறியதையடுத்துச் சந்தையை விஸ்தரிப்பதற்கு மாநகர சபை நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவினை யாழ். மாநகர சபை ஆணையாளா திரு. சீ. வீ. கே. சிவஞானம் ஒதுக்கியுள்ளதாக அவரிடம் தெரிவிதுள்ளார்.

இதனுல் சந்தையை விஸ்தரித்து கோழிக்கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள், கருவாட்டுககடைகள் போன்ற வற்றை அமைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.

# வளரும் சிறுர்கள் நலனில் அக்கறை காட்டவேண்டும்

(நெடுந்தீவு)

"துயர் மிகுந்த இன்றைய நாட்களில் எங்கள் சமுதாயத்தின் வளரும் பயிர்களான பச்சிளம் சிறுர்களின் உடல், உள வளர்ச்சியில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அத்தகைய சேவையை ஆற்றிவரும் சிறுவர் நிறுவனங்கள் எதிர்காலத்தை வளம் பொருந்தியதாக மாற்றும் பாரிய சக்தி வாய்ந்தவையாகும்."

இவ்வாறு நெடுந்தீவு தென் இந்திய திருச்சபையின் மேற்பார்வையில் நடாத்தப்பட்டு வரும் சிறுவர் பகற்பராமரிப்பு நிலையச் சிறுர்களின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. ரீ. அரியத்தினம் கூறினுர்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் "நான்கு வயதிற்கும் குறைந்த வயதினையுடைய எண்பது சிறுவர்கள் இந்த நிலையத்தில் பகற்பராமரிப்பையும் 'மொண்டி சோரி' கல்வியையும் பெற்றுவருகின்றனர். சிறுவர்களின் மனத்திற்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தும் பல விளையாட்டுக்களைப் பயிற்றுவித்துப் போட்டிகளை நடாத்திய ஆசிரியர்களைப் பாராட்டுவது அவசியமானதாகும்" என்றுர்.

நிலையப் பொறுப்பாளர் அருட்திரு. வில்லியம் தேவதாசன் வரவேற்புரை நிகழ்த்தினுர். நிலையத்தின் நிர்வாக உறுப்பினர் திரு' எஸ். மகேஸ் விளையாட்டுப் போட்டியை சிறப்புடன் நடாத்த உதவிய யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

நூற்றுக் கணக்கான பெற்றோரும், பொது மக்களும் விளையாட்டுக்களைக் கண்டு களித்தனர்.

# பதவியுயர்வு

(வல்வெட்டித்துறை)

பல வருடகாலமாக வல்வெட்டித்துறை தபால் நிலையத்தில் சிரேஷ்ட தபால் ஊழியராக கடமையாற்றிய திரு. ஆர். எஸ். வேலும்மயிலும் இப்போது தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் அகில இலங்கைத் தபால் தந்தி சேவையாளர் சங்க யாழ். கிளையின் உப தலைவரும், வல்வை தபாற் கந்தோர் நலன்புரிகழக இணைச் செயலாளரும், கற்கோவளம் வீடமைப்பு அபிவிருத்திச் சங்க போஷகரும், கற்கோவளம் சமாதான சபை, பாவனையாளர் பாதுகாப்புச் சங்க உறுப்பினரும், கிராம அபிவிருததிகளுக்கேற்ப நல்ல ஆலோசகரும் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

# அமரர் ஆனந்தம்

யாழ்ப்பாண ஏழை மக்களை பட்டினிச் சாவிலிருந்து ஏழு வருடகாலமாக காப்பாற்றிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆனந்தம் எங்கள் மத்தியில் இன்று இல்லை. இவர் சென்னையில் 31-7-86 மாரடைப்பால் காலமானுர்.

யூனியன் கல்லூரி பழைய மாணவரான ஆனந்தம் கல்வியிலும், விளையாட்டிலும், சாரணர் இயக்கத்திலும், பெரிய அண்ணன் அரவணைப்பில் ஒரு உண்மையான கிறிஸ்தவனுகவும் விளங்கினுர். இவர் அரசாங்க சேவையில் அதி உயர்ந்த நிர்வாக சேவை முதல் தரத்தில் உயர்ச்சி அடைந்து ஓய்வு பெற்றுர். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக வறிய மக்களின் நிலமை ஆராய்ந்து உணவு முத்திரைகளை வழங்கி உதவி செய்து வந்தார்.

ஆனந்தம்' என்ற பெயருக்கு அமைய இவர் எந்த நாளும் ஆனந்தமாக இருப்பதோடு தன்னேடு சேர்ந்தவர்களையும் ஆனந்தப்படுத்தி வந்தார். ஓய்வு பெற்றதும் கோப்பாயில் சமூக சேவையில், லயன்ஸ் தலைவராக அரும்பணி ஆற்றினுர்.

சென்னையில் இருந்து, மருதனுமடம் ஆதீன தலைவருக்கு இவர் எழுதிய கடைசிக் கடிததத்தில் தாம் ஒரு கிறிஸ்தவ துறவியாக விரும்புவதாக எழுதி இருக்கிறுர். அவர் யேசுவின் பிள்ளையாக பரமானந்தம் அடைந்துள்ளார்.

அவர் மனைவி மக்கள், ஒரு அருமைக் குடும்பத் தலைவனையும், கோப்பாய் மக்கள் ஒரு சமூகத்தொண்டனையும், கிறிஸ்தவ உலகம் ஓர் உண்மை ஊழியனையும், எம்மைப் போன்றவர்கள் ஒரு தலைசிறந்த நண்பனையும் இழந்து தவிக்கின்றேரும். அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் போமாக.

இ. சபாரத்தினம் ஜே பி.

# 'இன விடுதலை பங்களிப்பு மாணவர்க்கும் அவசியம்'

(சரசாலை)

"இன்று எமது இனம் இன்னல் பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ் ஈழ மாணவர்கள் ருக்கிங் என்ற செயலில் ஈடுபடுவது நல்லதல்ல. எனவே மாணவர்கள் மேற்படி செயலில் ஈடுபடும் நேரத்தை கல்வி கற்பதில் செலுத்த வேண்டும். அல்லது இன விடுதலைக்கு தமது பங்கைச் செலுத்த வேண்டும் மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில் தமது அறிவினை வளர்க்கும் நோக்கமாக செயல்படுதல் நல்லதாகும்.

தவறுன பாதைகளில் சக்திகளை பிரயோகிப்பது சிறப்பல்ல. எனவே சகலரும் மக்களது சுபீட்சத்திற்காக பாடுபடவேண்டும். அரசாங்கம் தமிழ் மாணவர்களது கல்வியைச் சீர்குலைக்க எத்தனையோ சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றது. எனவே நாம் விழிப்பாக இருந்து நிலையான கல்விச் செல்வத்தை வளர்க்க பாடுபடவேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி மடத்தடியில் இடம்பெற்ற "தமிழ்மாணவர் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னைநாள் கிராமாட்சி மன்றத் தலைவரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு. அ. ஆறுமுகம் குறிப்பிட்டார்.

கருத்தரங்கிற்கு டாக்டர் திரு. கே. வி. கே. திருலோகமூர்த்தி தலைமை தாங்கினுர். ஆசிரியர் திரு. கா. மனேகரன், திரு. கே. சின்னத்துரை உட்பட பலர் கருத்துரை நிகழ்த்தினர்.

# விளையாட்டு விழா

(சரசாலை)

தனங்கிளப்பு ஸ்ரீ முருகர் சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் கழக வருடாந்த விளையாட்டு விழா நிலைய விளையாட்டு மைதானத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இவ்விளையாட்டு விழாவிற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. வே. இரத்தினம் தலைமை தாங்கினுர். பிரதம விருந்தினராக தனங்கிளப்பு இணக்க சபைத் தலைவர் திரு. பொ. நமசிவாயம் கலந்து கொண்டார். இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் நேரு இல்லம் முதலாமிடத்தையும் காந்தி இலலம் இரண்டாமிடத்தையும் பெற்றன. இவ் விளையாட்டு விழாவிற்கு முன்னின்று நடத்தியமைக்காக செல்விகள் ச. பாலசரஸ்வதி, வி. ஜெயமலர், ச மகாலட்சுமி, வி. கலாராணி, செல்வன் க. அரசரத்தினம், க. பாலசுப்பிரமணியம், மு. சூரியகுமார், க. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் பாராட்டுப் பெற்றனர்.

பாலர் பிரிவிற்கான போட்டிகளில் ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலை முதலாம் இடத்தையும் நேரு பாலர் பாடசாலை பிரிவு இரண்டாம் இடத்தையும் அறவழி பாலர் கழகம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன. ஆசிரியர் திரு. அ. பாலசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினுர்.

# அவர்கள் தவறினுல் மாணவர் பாதிப்பு

(வல்வெட்டித்துறை)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் 5ம் திகதி நடந்த கணக்கியல் பரீட்சை வினுத்தாளில் வந்த முதலாம் வினுவாகிய கம்பெனிமுடிவுக் கணக்கானது மாணவர் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் தான்.

அம் முடிவுக் கணக்கானது இயக்குநர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதா? அல்லது பங்குதாரருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதா என்பதே.

இவ் வினுவுக்குரிய புள்ளிகள் முப்பது. வினுத்தாளில் ஏற்பட்ட தவறினுல மாணவர்கள் முப்பது புள்ளிகளை இழக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உ
முருகா

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986




B/1449

இன்று 7-ம் திருவிழா

காவடிச் சிந்து

பாவலார் தொடுக்குந்தமிழ் மாலையே மணக்குந்திரள்
பன்னிரண்டு தோளன்முரு கேசன்—அவன்
என்னிரண்டு கண்களுக்குள் வாசன்—துதி
பரடுமன்ப ரோடுகலந் தாடுவதும் பாடுவதும்
பாவவினை போக்குமிது திண்ணம்!—உன்னைத்
தேவனென ஆக்குமென்ப துண்மை!
—சோ.ப

எந்தை கந்தனைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோசப்'

உதய சிந்தனை

பேசாத வார்த்தைக்கு நீங்கள் எஜமான், பேசிய வார்த்தை உங்களுக்கு எஜமான்.

-மில்டன்.

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒலி

16-8-86 சனிக்கிழமை (அக்ஷய) ஆடி 31

# இணைத்துத் தருவதா? பிரித்து வழங்குவதா?

இலங்கை அரசாங்கத்துக்கும் கூட்டணித் தலைவர்களுக்குமிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இருபத்தைந்து வருடங்களாக சிங்கள அரசாங்கங்களுக்கும், தமிழர் தலைவர்களுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எந்தப் பயனையும் அளித்ததில்லை.

இருப்பினும் சமாதானத் தீர்வை விரும்பும் தமிழர்கள், தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் ஏகபோக பிரதிநிதிகளாக தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள், அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சில் இறங்கியுள்ளனர்.

வடக்குக் கிழக்கை இணைக்க முடியாது என்ற ஆட்சியாளரின் பிடிவாதத்துக்கும், வடக்கும் கிழக்கும் இணையாத எதனையும் ஏற்கமாட்டோம் என்ற கூட்டணியினரின் இறுக்கமான முடிவுக்குமிடையே இப்போது பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து வெற்றி கண்டவர்கள் கூட்டணியினர்.

''தமிழீழமே எங்கள் தாகம்; வடக்கும் கிழக்கும் இணைந்ததே எங்கள் தாயகம்'' என்று கூறி போராட்டம் நடத்திவருபவர்கள் விடுதலை இயக்கங்களின் போராளிகள்.

வடக்குக்கிழக்கு இணைப்புக் கோரிக்கையைக் கைவிடுமாறு இந்திய அரசு கூட்டணியினரிடம் கேட்டிருப்பதாகக் கூட சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

ஆனால் அதனை கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் முற்றாக மறுத்துள்ளார்.

எந்தவொரு இந்திய அரசுத் தலைவரோ, அதிகாரியோ இவ்வாறு தங்களிடம் தெரிவிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

''உங்கள் கோரிக்கையை நீங்கள் தான் வலியுறுத்தவேண்டும்; நேருக்கு நேரான பேச்சில் உங்கள் அபிலாஷைகளை நீங்களே வற்புறுத்தவேண்டும்'' என்றே புதுடில்லி அதிகாரிகள் தங்களிடம் தெரிவித்ததாகவும் திரு. அமிர்தலிங்கம் சொல்லியுள்ளார்.

''வடக்கு கிழக்கு இணைப்பு என்பது புதியதொன்றல்ல; இது தமிழர் பிரதேசம்; எனவே தமிழர் பிரதேசத்துக்கு ஒரு அமைப்பை கேட்கின்றோம்; இதனைப் பிரித்துத் தருவதை நாம் விரும்பவில்லை'' என்பது கூட்டணியினரின் நிலைப்பாடு.

தமிழீழக் கோரிக்கையிலிருந்து போராளிகள் அமைப்புக்கள் விலகவில்லையாயினும், வடக்குக் கிழக்கு ஒன்றான அமைப்பை இப்போதைக்கு அவர்கள் எதிர்க்கமாட்டார்கள் எனவும் அவர்கள் நம்புகின்றனர்.

கடந்த மாதம் கொழும்பு வந்தபோது, சட்டம், ஒழுங்கு, காணிப்பங்கீடு, கல்விக் கொள்கை, குடியேற்றம் ஆகியவைகள் பற்றியே கூடுதலாகப் பேச்சுநடத்திய கூட்டணியினர், இம்முறையே அடிப்படை அம்சத்தை வலியுறுத்த முனைந்துள்ளது நாம் முக்கியமான ஒருகட்டத்தில் நிற்கின்றோம் என்பதை உணர்த்துகின்றது.

மாகாண சபைகளையே எதிர்க்கும் சுதந்திரக் கட்சியினரும், அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்படும் மகாசங்கத்தினரும் தமிழர் பகுதிக்கான தனிச் சபையை ஏற்க மாட்டார்கள் என்பது எமக்குத் தெரியும்.

அரசாங்கமும் கூட இதற்குச் சம்மதிக்காது என்பதுவும் எமக்குத் தெரியும்.

ஆனாலும், அவர்கள் விரும்பமாட்டார்கள், ஏற்கமாட்டார்கள், தரமாட்டார்கள் என்பதற்காக எமது கோரிக்கையை நாம் வலியுறுத்தாமல் விடமுடியாது.

பேசும் வரை கேட்க வேண்டும்.

கேட்டுப் பெற முடியாதவைகளை அடித்துத்தான் பெற வேண்டுமென்றால் அதற்கும் தயாராக வேண்டும்.

வேறென்னதான் செய்ய முடியும்?

★ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் "காங்கிரஸ் நியூஸ்' இதழின் ஆசிரிய தலையங்கத்தின் மொழிபெயர்ப்பின் இறுதிப் பகுதி. முதலிரு பகுதியும் இம்மாதம் 13-ம் 14-ம் திகதிகளில் வெளியானது.

# இந்நாடு முழுவதையும் சிங்களவரே பரிபாலித்ததாக கூறுவது போலித்தனமானது

இலங்கையில் இனப் பிரச்சினைத் தீர்வுக்குக் குறுக்கே இது வரையும் நின்றது என்ன? சிங்களவரின் மேலாதிக்கம் வாய்ந்த இத் தீவின் அரசுகளின் தயக்கமும் தடங்கலுமே காரணங்கள். தமிழருடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் ஒன்றன்பின் ஒன்றாகவந்த இப்படியான அரசாங்கங்களின் மனப்பான்மையே தடையாயிற்று. இங்ஙனம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒருமைப்பாடுடைய ஓர் அரசிலுங்கூட, ஆட்சி அதிகாரம் பகிர்ந்துகொள்ளப்படவேண்டி இருக்கிறது. சிங்கள அரசியல்வாதிகள் இதனை உணர்ந்தார்களில்லை. இராணுவ ரீதியான ஒரு உள்ளூர்க் கிளர்ச்சி எனும் வடுவுக்கு, சோக அனுபவத்திற்கு இந் நாடு ஆளாக வேண்டியிருந்தது. அதன்பின்னரே இவ்வரசியலாளர்கள் இந்த யதார்த்த தத்துவத்தை நன்குணர்ந்து கொண்டுள்ளனர். இது எவ்வளவு துர்ப்பாக்கியவசமானது!

பிரித்தானிய ஆட்சி இலங்கைத் தீவில் உச்சவளம்பெற்று விளங்கிய காலத்தில், 'கற்றோர்' எனப்பட்டோர், சிங்களவராயினுஞ் சரி, தமிழராயினுஞ் சரி, அவர்கள் மத்தியில் அடிமனதினிடத்தே சந்தேகம், பொறாமை, அச்சம் என்பன குடிகொண்டிருந்தன. வளர்ந்தோர் யாபேர்க்கும் சமவாக்குரிமை, தேசிய சுதந்திரம் ஆகியன இந் நாட்டிற்குக் கிடைத்த யுகத்தின்போது, உட்கிடையான இவ்வுணர்வுகள் மேலெழுந்து மலர்ந்தன. எடுத்ததெற்கெலலாம் போருக்கு அறைகூவும் மனப்பான்மை மலிந்தது. ஆனால் கிரமமான பாராளுமன்றத் தேர்தல்களும், உள்ளூராட்சித் தேர்தல்களும், இவற்றை மீண்டும் உணர்வோட்டங்களின் ஆழத்திற்கு அமிழ்த்திவிட்டன எனவே இவ்வுணர்ச்சிகள் சிங்கள தமிழ் பொது மக்களின் உட்கிடைக் கருத்துக்களாகிவிட்டன.

'உவெஸ்ற்மின்ஸ்ரர்' ரக பாராளுமன்ற அரசாட்சி முறையின் அர்த்தம், பெரும்பான்மை ஆட்சி என்பதாகும். ஆனால், சட்டத்தின் நோக்கில் பிரஜைகள் யாபேரும் சமமானவர்கள் என்ற 'றூல் ஓஃவ லோ' அடிப்படைத் தத்துவம் கனம்பண்ணப்படுதல் வேண்டும். அதேபோல மனிதனின் குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மனிதனின் அடிப்படை உரிமைகள் கனம் பணணப்படுதலும் அத்தியாவசியமாகும். அப்படிக் கனம் பண்ணப்படாதிருக்கும்பட்சத்தில் பெரும்பான்மையினர் நியாயமற்ற நடத்தை உடையோர் ஆகலாம். அப்பேர்ப்பட்ட நியாயமில்லையானது கொடுங்கோன்மையாகி, பல தரப்பட்ட அநீதிகள், பாரபட்சம் என்பவற்றுக்கு இட்டுச் செல்லவுங்கூடும் அத்தறுவாயில் பெரும்பான்மை மக்களினது கொடுங்கோன்மையே பாராளுமன்றஅரசாட்சிமுறை என்னும் போர்வையில் நிலவும்.

இலங்கை அரசியலில் நேர்ந்தது இதுதான். இந்நிலைமையின் முதலாவது அறிகுறி 1936 ல் தென்பட்டது: டி.எஸ் சேனநாயக்கா, முழுமையும் சிங்களவர்களையும் கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைத்தார். பிரிட்டிஷார் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கினர். பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கு அச்சுதந்திரம் வழங்கப்பட்டது அதன் பயனாக, ஓர் ஒன்றிணைக்கப்பட்ட, மத்திய நிருவாகத்தின் கீழான இலங்கைத் தீவுக்கு அவர்கள் எஜமானவர்கள் ஆனார்கள். அதன் காரணம், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் ஒன்றுமறியா அப்பாவித்தனம், அறியாமை, அல்லது கபடமான பிரித்தாளும் தந்திரம் ஆக இருந்திருக்கும்.

இலங்கைத் தீவில் சிங்களவரின் வரலாறு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக நிலவிவருகிறது. இக்காலம் முழுமையின் போது இத்தீவு முழுமையின் மீதுள்ள மத்திய அதிகாரம் சிங்களவர்களின் கையில் இருந்தது கிடையாது. ஆயினும் இம்முழுத் தீவின் மீதும் சிங்களவர் மத்திய அதிகாரம் பாலித்து வந்ததாக ஒரு போலிக் கோரிக்கையை நிருபிக்க அவர்கள் விரும்பினர் எனவே, அப்போலி நிலைமையை நிறுவும் நோக்கத்தோடு, சிங்களவரின் இலங்கை வரலாறு திருப்பி எழுதப்பட்டது: தாமே இத்தீவின் மீது பூரண ஆதிக்கம் செலுத்தினர்; இடையிடையே இந்தத் தொடரான ஆட்சி, தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழரின் படையெடுப்பினால் தடைப்பட்டிருந்தது. இவ்வாறாக இலங்கையின் வரலாறு போலியாகத் திருப்பி எழுதப்பட்டது.

வேண்டுமென்றே இங்ஙனமாக இலங்கையின் போலி வரலாறு சிருட்டிக்கப்பட்டதன் நோக்கம் என்ன? ஆதி நாட்கள் முதல் நிலவிய இலங்கைச் சமுதாயத்தின் உண்மை நிலைமையை மறுத்துரைப்பதே இதன் நோக்கமாகும். தொல் பழங்காலந்தொட்டு இலங்கைத்தீவில் பல சமுதாயங்கள் பல சமயங்கள் (மதங்கள்) பல மொழிகள், பல கலாச்சாரங்கள் இடம் வகித்தன என்பதே யதார்த்த, உண்மையான நிலைமை.

மேலும், சிங்களவரின் தனியுரிமையே பௌத்த மதம் என இப்போலி வரலாறு வலியுறுத்திற்று, ஆனால் புத்த சமயம் இலங்கைக்கு அறிமுகம்செய்யப்பட்ட தருணம் தென்னிந்தியா பெருமளவில் அந்த மதத்தினையே தழுவியதாக இருந்தது. மகிந்தா இலங்கைக்கு வருகைதந்து வெகு காலமான பின்னரும் கூட தென் இந்தியாவில் பௌத்தமதம் பரவலாக காணப்பட்டது. இவை ஒருபுறமிருக்க, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் காணப்பட்ட பௌத்த சமய இடிபாடுகள் தமிழ்ப் பௌத்தர்களின் கைவண்ண விளைவானவையல்ல எனக் காண்பித்தற்காகவும் வரலாறு திரித்து எழுதப்பட்டது.

இக்காலப் பகுதியின்போது தான் ஐம்பெரும் காவியங்களில் 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை' எனும் இரண்டு சிருஷ்டிகள் எழுதப்பட்டன. பௌத்த தத்துவஞானமும், உன்னத குறிக்கோள்களும் தான் அவற்றை உருவாக்குவதற்கு உத்வேகம் அளித்தன. அனுராதபுரத்தில் முதல் மூன்று பௌத்த மத குருமாராக விளங்கியோர் தமிழர்களே. இது ஒரு மெய்ம்மை. இம்மெய்ம்மையும் இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

டொனமூர் யுகம், சோல்பரி யுகங்களில் இப்போலி வரலாறுகள் புனைந்து எழுதப்பட்டன. இச்சரித்திரப் படைப்புகள் 1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மாத்திரம் (அரசகரும மொழி)' சட்டம் உருவாதற்கு இட்டுச்சென்றன. இவ்வகையாக, இலங்கை அரசியலின் உச்சக்கட்டம் 1972 ஆம் ஆண்டின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினது அரசியலமைப்பில் முடிந்தது.

1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம் தமிழ் மக்களையும் ஏனைய சிறுபான்மைச் சமூகத்தவர்களையும் தரமிறக்கிவிட்டன. மதம், மொழி, கல்வி, மனித உரிமைகள் முதலாம் துறைகளில் இது செயற்பட்டது. இடதுசாரி இயக்கமே இந்த சிறீ ல. சு. க. யின் கர்த்தாவாகத் திகழ்ந்தது. ஈற்றில் அதே அரசியலமைப்பு எனும் இடுகாடு அல்லது புதைகுழியின் உள்ளேயே இடதுசாரி இயக்கமும் 'சமாதி' ஆயிற்று.

இன்னும் சொல்லப்போனால், 'தமிழ் ஈழ' க் கோரிக்கையைப் பிறப்பித்த 'பெருமையும் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் (சிறீ ல சு க.) இலங்கை அரசியலமைப்பையே சாரும். 1978 ஆம் ஆண்டின் (ஐ. தே. க.) அரசியலமைப்பானது, சமூகங்களுக்கிடையில் மூண்ட விரோதத்தினின்றும் ஐ. தே. கட்சிக்குச் சாதகமானவற்றை, அச்சமூகத்தவரைக்கொண்டே ஈட்டிக்கொள்ள வெகுவாக முயன்று பார்த்தது. ஆயினும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்குப் போதிய அதிகாரங்களை உரித்தாக்க அது தவறிவிட்டது. அதனால் அம்முயற்சி பலிதமாகவில்லை. அது மட்டுமல்ல.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் ஆதிக்கமும் பெயரும் மங்கிப்போகவும் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் ஐக்கிய தேசியக் கட்சி அரசியலமைப்பு வழி சமைத்தது தமிழர் விடுதலைப் போராளிகளின் இயக்கம் உருவாகி வளரலாயிற்று. அதனையடுத்துச் சம்பவித்த அனைத்தும் தற்கால வரலாறு ஆயின.

ஜெயவர்த்தன அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள பிரேரணைகள், இலங்கையின் தமிழர் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினைக்குத் தீணைநிற்குமா? இது தான் இப்பொழுது நம் முன் உள்ள கேள்வி.

### பக்தியுணர்வுடன் சீரிய

# பணிபுரிந்தவர் அமரர் திருமதி யோகம் சுப்பிரமணியம்

கடந்த18 ஆண்டுகளாக அமரர் யோகம் சுப்பிரமணியம் சாவகச்சேரி இந்து முதனிலைப் பள்ளியில் தொடர்ந்து ஆசிரியையாக கல்வி கற்பித்து மாணவர் ஆசிரியர் பெற்றோர் அனைவரினதும் பெரும் மதிப்பைப் பெற்று விளங்கினார்.

ஆரம்பக்கல்வியை மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை கோப்பாய் மகளிர் கல்லூரியிலும் கற்று ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி உமையாள் புரம், ஆனையிறவு, அல்லாரை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பித்து கடைசியாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியிற் கடமையை ஏற்றுக்கொண்டார்.

சாவகச்சேரி வடக்கில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த இவரின் மூன்று சகோதரர்கள் டாக்டர்களாகவும், சிலர் வங்கி அலுவலர்; சிலர் ஆசிரியர்கள் தக்கார் தகவிலர் என்பது அவரது எச்சத்தாள் காணப்படும் என்பதற்கமைய இவரது துணைவரும் ஓர் அதிபராகையால் இவர்களது பிள்ளைகள் மூவர் டாக்டர்களாகவும் ஒருவர் பொறியியலாளராகவும்ஏனைய இருவரும் அதிவிவேகம் படைத்த மாணவர்களாக வேம்படி மகளிர் கல்லூரியிலும் சென். யோன்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்கிறார்கள்

சாவகச்சேரி இந்துவில் குருகுலச் சாரணர் பிரிவுக்கு பொறுப்பாசிரியையாக விளங்கியதுடன்பலகாலம்5 ஆம் வகுப்புக்குப் பொறுப்பாசிரியராக விருந்து வருடாவருடம் பல மாணவர்களை புலமைப் பரீட்சையிற் சித்தியடையச் செய்தார். இவர் ஓர் சிறந்த முருக பக்தர். பக்தர்கள் விரைவில் இறைவனடி சேர்வார்கள். மரணம் தவிர்க்க முடியாதது தான் எனினும் இவ்வளவு விரைவில் மரணம் இவரை அணைத்துக் கொள்ளும் என்பதை யார்கண்டார்? ஆசிரிய இலட்சணங்கள் அத்தனையும் நிரம்பியஇவரின் மறைவுகல்லூரிக்கு பேரிழப்பாகும்.

அ. ஆறுமுகம் ஜே.பி.

## 'பல்துறை சேவை புரிந்த பெரியார்'

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட முன்னாள் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும், கோப்பாய் கிராமசபையின் முன்னாள் விசேட ஆணையாளரும், கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவரும், சமூகசேவையாளருமாகிய திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தத்தின் மறைவு யாழ். மாவட்ட மக்களால் ஈடுசெய்ய முடியாத மிகப் பேரிழப்பாகும்'' என்று கோபபாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் அமரர் ஜே. எஸ். எஸ். ஆனந்தத்தின் மறைவு குறித்து நிறைவேற்றப்பெற்ற அனுதாபத் தீர்மானத்தின் மீது பேசுகையில் மேற்படி சங்கச் செயலாளரான ''சமூக இரத்தினம்'' எம். கே. இளையப்பு, ஜே. பி. குறிப்பிட்டார்.

மேற்படிச் சங்கத் தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில், கோப்பாய் தெற்கு றோ. க. த. க. வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் மேற்படி அனுதாபத் தீர்மானத்தை அநுவதித்துப் பேசுகையில், ''அன்பும், பண்பும், அடக்கமும் நிறைந்த ஒரு சமூகத் தொண்டனை, கோப்பாய் கிராம மக்கள் இழந்துவிட்டனர் என்று குறிடபிட்டார். அன்னாரது மறைவுககாக இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அனுதாபத் தீர்மானத்தின் பிரதி அவரது குடும்பத்துக்குஅனுபபி வைப்பதாகவும் சபையோரால் முடிவு செய்யப்பெற்றது.

மேலும் அரசினரால் வழங்கப்படவிருக்கும் 1987 ஆம் வருடத்திற்கான நிதி ஒதுக்கீட்டில், கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கான அபிவருத்தி வேலைகள் சம்பந்தமாக சபையோரால் பரிசீலனை செய்யப்பட்டது.

அவ்வமயம் 1987 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில மேற்படி சங்கக் கட்டிடம் அமைப்பதற்குரிய நிதியை ஒதுக்கித் தரும்படியாகவும் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமைகளிலிருக்கும் ஒழுங்கைகளை திருத்துவித்தும் அந்த ஒழுங்கைகளுக்கு மின் இணைப்பு ஏற்படுத்தி தரும்படியாகவும் கடந்த காலங்களில் திருத்துவித்து நிறைவுறமல் அறைகுறையாகவிருக்கும் ஒழுங்கைகளின் வேலைகளை நிறைவுபடுத்தியும் இருபாலை கிழக்கிலுள்ள சுடலைக்கு மேடையொன்றும், மடம் ஒன்றும் அமைத்துத் தரும்படியாகவும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அவர்களை கேட்டுக்கொள்ளும் இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## இரவு ரோந்து

(கரவெட்டி)

இன்று நாடெங்கிலும் தலைவிரித்தாடும் கொலை. கொள்ளை, வழிப்பறி, ஆட்கடத்தல் என்பனவற்றை கட்டுப்படுத்தும்முகமாக நெல்லியடி பட்டினசபை பிரதேச எல்லைக்குள் இரவு நேர ரோந்துக்கு நூற்றுக்குமதிகமான இளைஞர்கள் தாமாகவே முன் வந்துள்ளனர்.

இவ்விளைஞர்களுக்கு விசேட அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. ரோநது நேரங்களில் இவர்கள் அடையாள அட்டைகளுடனே சேவையாற்றுவர் என்றும் தெரியவந்துள்ளது.

## சீரமைப்பு

(அளவெட்டி)

காங்கேசன்துறை, சுன்னுகம் ஆகிய பகுதிகளில் அறுந்து கிடக்கும் தந்திக் கம்பங்களுக்கு புதிய வயர்கள் இணைத்து, சீரமைக்கும் பணியை சுன்னுகம், காங்கேசன்துறை தொலைபேசித் தொலை தொடர்பு சங்கத்தினர் ஆரம்பிக்கவுள்ளனர்.

இத்தகைய திருத்த வேலைகள் நடைபெறும் பட்சத்தில் மேற்படி இரு பகுதிப் பிரிவுகளிலும் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இயங்காமலிருக்கும் தொலைபேசிகள்இயங்க வாய்ப்பு ஏற்படும்.

''புதிய வயர்கள் இணைக்கப் பட்டு வேலைகள் நடைபெற்ற பின்னர் மீண்டும் தொலைபேசி வயர் வெட்டுபவர்களை கண்காணித்துப் பாதுகாக்கும்படி ''புனித இயக்கங்களுக்கு ஒரு வேண்டுகோள்'' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

மேலும், அவ்வறிக்கையில், இன்றைய நிலையில் நாம் அரசிடமிருந்து இதற்கான நிதியை, பொருட்களைபெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான் எமது சங்கம் சொந்தச் செலவில் மேற்படி வேலைகளைச் செய்து முடிக்க முன்வந்துள்ளது. இவற்றை இயக்கங்கள் தலையிட்டு பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்'' எனகோரப் பட்டுள்ளது.

### ★ பாரத சுதந்திரதினச் செய்தியில்

# வன்முறை ஒடுக்க உறுதி - ராஜீவ்

# விழிப்புணர்ச்சி தேவை - ஜெயில் சிங்

(புதுடில்லி)

**''வன்முறைகளை ஒடுக்க அரசு வலுவான நடவடிக்கை மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளது'' என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி பாரதத்தின் 39ஆவது சுதந்திரதினத்தையொட்டி விடுத்துள்ள விசேடசெய்தியில் தெரிவித்துள்ளார்.**

பாரதத்தின் 39-வது சுதந்திர தினவிழா நேற்று நாடெங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.



ஜனாதிபதி திரு. ஜியானி ஜெயில்சிங் தனது செய்தியில் ''பாரதத்தின் உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய சக்திகள் தலையிட முனைவது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்'' என கேட்டுக் கொண்டுள்ளார்.

''ஒற்றுமை உணர்வுடன் செயற்பட்டு மக்கள் கௌரவமாக வாழ வேண்டும். அந்நிய பிளவு சக்திகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிக்கக் கூடாது'' என்று குறிப்பிட்டுள்ள அவர், சமூக நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு மக்களாதரவு தேவை' என்றும் வலியுறுத்தினார்.

''அவநம்பிக்கையை அகற்றி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்படவேண்டும். நாட்டின் ஒற்றுமையும்,கண்ணியமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். கடமையுணர்ச்சி மேம்பட வேண்டும்'' என்றும் ஜனாதிபதி தனது செய்தியில் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, சோவியத் துணை ஜனாதிபதி



திரு சாலிவ் தற்போது பாரதத்திற்குவந்துள்ளார் அவரை அமைச்சர் திரு. காட்கில் விமான நிலயத்தில் வரவேற்றார்.

### மந்திரி ராஜதுரை தமிழகத்தில் நம்பிக்கை

# பாரதத்தின் நல்லெண்ண முயற்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படலாம்

(சென்னை)

இலங்கை இனப் பிரச்சினையில் பாரதம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு இலங்கை பிராந்திய அபிவிருத்தி, இந்துக் கலாச்சார மந்திரி திரு செல்லையா இராஜதுரை தமிழகத்தில் வைத்துப் பாராட்டுத தெரிவித்துள்ளார்.

தற்போது அவர் தமிழகத்தில் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

'பாரதத்தின் நல்லெண்ண முயற்சியால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படக்கூடும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் பாண்டிச்சேரிக்குச் சென்ற போது முதலமைச்சர் திரு. பாரூக் மற்றும் தலைவர் களையும் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் தற்போதைய நிலவரம் குறித்தும் எடுத்துச் சொன்னதாகவும் மந்திரி குறிப்பிட்டார்.

### சீனாவும், மங்கோலியாவும்

# பகைநீக்கி நேசம் கொள்ள தீர்மானம் என தகவல்

(பீக்கிங்)

சீனாவும், மங்கோலியாவும் மீண்டும் தமது உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ள முடிவு செய்துள்ளன. சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு பின்னர் அந்த நாடுகள் இவ்வாறு செய்துள்ளன.

மங்கோலியாவில் 1960 ம் ஆண்டு சோவியத் யூனியன் படைகளை குவித்ததால் இரு நாடுகளும் பகைத்துக் கொண்டன.

மங்கோலியாவில் இருந்து சுமார் அறுபதினாயிரம் துருப்புக்கள் உள்ள படைகளை சோவியத் யூனியன் வாபஸ் பெறுவதைத் தொடர்ந்தே இந்த உறவுகள் ஆரம்பமாகின.

## இன்று

(நீர்வேலி)

நீர்வேலியின் கிழக்குப் புறத்தே பரந்து காணபபடும் வயல் வெளியின் மத்தியில் உள்ள ''அலரிப பூங்கா'' அருகில் இன்று சனிககிழமை விளையாட்டு மைதானமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இவ் வைவத்திற்குப் பிரதம அதிதியாக திரு. க. கோபாலரட்ணம் (மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்) சிறப்பு விருந்தினர்களாக திரு. க. சபாபதிப்பிள்ளை (கோப்பாய், உதவி அரச அதிபர்), திரு. கு. கிட்ணர் (ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர்), திரு. ஏ. மரியதாஸ் (யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி) ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு நிகழ்சசிகளாக காலையில் நீர்வேலி சனசமூக நிலையங்களிற்கிடையிலான கரபந்தாட்டப் போட்டியும், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியும் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகளாக யாழ். வைக்கின்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ். பமேலியன்ஸ் விளையாட்டுக் கழகங்களிற்கும் இடையிலான வலைப்பந்தாட்டமும், பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் என்பவற்றிற்கு இடையிலான உதைபந்தாட்டமும் இடம் பெறும். மேற்படி நிகழ்ச்சிகளிற்கு தலைவராக திரு. க. இராஜதுரை (நீர்வேலி கிராம அபிவருத்திச் சங்கம்) கலந்து கொள்வார்.

## புனரமைப்பு

(வல்வெட்டித்துறை)

நெல்லியடி சனமூக நிலையம் அப்பகுதி இளைஞர்களால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இச் சனசமூக நிலையம் 1948ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

## இன்று

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகிலுள்ள ''தெய்வக் குழந்தைகள் இல்ல''த்தில் இன்று மாலை மாதர்களுக்கான கருத்தரங்கொன்று நடைபெறும். இக்கருத்தரங்கில் சமூக பொருளாதார கலாச்சாரமுயற்சிகள் குறித்துப் பலர் உரையாற்றுவர்.

## பேச்சுவார்த்தை

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பார்வையாளர் தங்குமடமும், ஆஸபத்திரி சுற்று மதில் அமைப்பதற்குமான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க. லலித்குமார், யாழ். அரசாங்க அதிபரை சந்தித்து இது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

## தையல் மெஷின் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பேதுரு பிலிப்ஸ், ஜே. பி. லயன்ஸ் கழகத்தின் சார்பில் விதவை ஒருவருக்கு புதிய சிங்கர் தையல் மெஷின் ஒன்றை வழங்கினார்.

வறுமை நிலையிலுள்ள இவர் தனது வறுமை நிலையைச் சமாளித்து ஓரளவு தரமான வாழ்க்கை நடத்துமுகமாகவே இத் தையல் மெஷினை லயன்ஸ் கழகம் அன்பளிபபுச் செய்துள்ளது.

ஈழமுரசு

# யாழ். முஸ்லிம் இளைஞன் டைனமைற் திரிகளுடன் கைது!

(வவுனியா)

வவுனியா, புகையிரத நிலையத்தில் கொழும்பு செல்லும் பயணிகளின் பொதிகளைச் சோதனையிட்ட புகையிரத பாதுகாப்பு ஊழியர்கள், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற முஸ்லிம் இளைஞரான சாகுல் ஹமீட் மியாஸின் சூட்கேஸினுள் இருந்து முந்நூறு டைனமைற் திரிகளைக் கண்டெடுத்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்பின்னர் இந்நபருடன் அங்கு உரையாடிய வேறொரு யாழ். முஸ்லிம் நபரும் பாதுகாப்பு அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டார். இருவரும் வவுனியா பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

பல்கலைக்கழக மாணவர் குழு கேட்டுள்ள

# பரீட்சை ஒத்திவைப்புக் கோரிக்கையை

# 'செனட்' திங்களன்று கூடி முடிவுசெய்யும்

பல்கலைக்கழகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றியும், மாணவர்களின் கோரிக்கை பற்றியும் நாளை மறுதினம் பல்கலைக்கழக 'செனற்' கூடும்போது ஆராயப்படவுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் பல்கலைக்கழக 'கவுன்ஸில்' கூடியபோது பல்கலைக்கழக நிலை பற்றியும், மாணவர்களின் கோரிக்கைகள் பற்றியும் பதில் துணைவேந்தர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் விளக்கிக்கூறினார்.

இதன் பின்னர் மாணவர்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பரீட்சையை ஒத்திப்போடுவது தவிர்ந்த ஏனைய கோரிக்கைகளில் உடன்பாடு காணப்பட்டது. இதனாலேயே மாணவர்கள் தமது மறியல் போராட்டத்தைக் கைவிட்டு நிர்வாகம் இயங்குவதற்கு வழி ஏற்படுத்தினார்கள்.

எனினும், பரீட்சையை ஒத்திவைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து மாணவர்கள் தொடர்ந்தும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றார்கள். நாளை மறுதினம் 'செனற்' கூடும்போது மாணவர்களின் இக்கோரிக்கை பற்றி ஆராயப்படும். அதன் பின்பே மாணவர்கள் தமது அடுத்த நடவடிக்கை பற்றி ஆராய்வார்கள் எனத் தெரியவருகிறது.

## 'மக்கள் மன்றம்' கண்டனம்:

# பல்கலைக்கழக மாணவரின் அர்த்தமற்ற பகிஷ்கரிப்பு

'தமிழ் மக்களின் உயிருக்கும் உடலுக்கும், உடைமைக்கும் பேராபத்து எந்நேரமும் நிகழலாம் என்ற இக்கட்டான இன்றைய சூழலில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஓர் அர்த்தமற்ற ஆட்சேபனையைக் கிளப்பி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது மிகவும் விசனிக்க வேண்டியதொரு நடவடிக்கை' எனத் தெரிவித்துள்ள ''யாழ்ப்பாண மக்கள் மன்றம்'', 'இளைஞர் மத்தியில் வேறுபாட்டையும் பிரிவினையையும் உருவாக்கவே இது உதவுகிறது' எனவும் கருத்து வெளியிட்டுள்ளது.

'வெளியார் தலையீட்டை பல்கலைக்கழக அதிகாரபீடம் நிராகரிக்க வேண்டும் என்பது ஒரு தெளிவற்ற நியமம். அதேபோல 'ரூக்கிங்' என்பதும் தெளிவற்ற நியமம். எந்த ஒரு நிறுவனமும் சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதென்பது மறுக்கமுடியாத உண்மை' எனவும் மக்கள் மன்றம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூ விக்ரேஸ்

எமது புதிய வீடியோபட வெளியீடு

நீங்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

★ ஊமை விழிகள் ★

தரமான பிரதி

அன்று: சின்னவீடு. இன்று: ஊமை விழிகள்

அடுத்த வெளியீடு ?

R/24697 தொலைபேசி: 23532

றியோ மினி [ராஜா முன்பாக]

இன்று முதல் 2-30 காட்சியுடன் ஆரம்பம்

யாழ். மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த

புரட்சிக் கனல்

விஜயகாந்தின்

★ ஊமை விழிகள் ★

R/24696

# கொள்ளைச் சம்பவத்தில் இது சிறிது வித்தியாசமானது

(உடுவில்)

கடந்த புதன்கிழமை இரவு பன்னிரண்டு மணியளவில் சங்குவேலியிலுள்ள இரண்டு வீடுகளில் முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வீட்டிலுள்ளவர்கள் ரீ. வி. பார்த்துவிட்டுப் படுத்த சிறிது நேரத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றது. இளைப்பாறிய அதிபர் சி அரசரட்ணம், ஐ. இராஜசூரியர் ஆகியோரின் வீட்டிற்கு டெலிக்கா வானில் வந்த சுமார் பதினைந்து துப்பாக்கி நபர்கள் மூன்று சங்கிலி, இரண்டு கைக்கடிகாரம், ஒரு மின்விசிறி என்பனவற்றைக் கொள்ளையடித்ததுடன் ரீ. வி. டெக், சூட்கேஸ் என்பனவற்றையும் கொள்ளையிட முயன்ற சமயம் இராஜசூரியரின் மனைவியின் துணிச்சலான செயலினால் கொள்ளையர் அப்பொருட்களை எடுக்க முடியாமல் போய்விட்டது.

ஒரு நபரின் 'துப்பாக்கி மகசீன்' பறிக்கப்பட்டு பின்னர் அது 'புலிகளிடம்' ஒப்படைக்கப்பட்டது.

# சட்டவிரோத மின்வயர்கள் வேலணையில் எரிக்கப்பட்டன

(வேலணை)

வேலணைப் பகுதியில் உள்ள சகலசட்டவிரோதமின்பாவனையாளர்களது மின் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டு சட்டவிரோத மின்பாவனைக்கு பயன்படுத்தப்பட்ட பெருந்தொகையான மின் வயர்கள் கைப்பற்றப்பட்டு பொது இடமொன்றில் வைத்து நேற்று முன்தினம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

வேலணைப்பிராந்தியத்தில் மின்மாற்றிகள்பழுதடைவதை தவிர்க்கும் நோக்குடனும், சட்டவிரோத மின்சாரத்தை ஒழித்துக்கட்டும் நோக்குடனும் இளைஞர் அமைப்புக்கள் பல ஒன்று சேர்ந்து பொது மக்களினதும், வேலணை மின்சார சபை ஊழியர்களினதும், அதிகாரியினதும் ஒத்துழைப்புடனும் வாகனமொன்றில் வீடு, வீடாகச்சென்று சட்டவிரோத மின்பாவனைக்கு உபயோகிக்கப்பட்டு வந்த பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த மின்வயர்களைக் கைப்பற்றி வந்து வேலணை பங்களாவடி சந்திக் கருகாமையில் பொது மக்கள் முன்னிலையில் தீவைத்து எரியூட்டப்பட்டன.

## கொழும்பு - யாழ் ...

சேதமெதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பஸ்ஸில் பயணம் செய்த பெண் ஒருவரும், சாரதியும் இதனால் சிறிது காயமடைந்துள்ளார்கள். பஸ்ஸின் கண்ணாடிகளும் உடைந்துள்ளன.

## ஆஸ்பத்திரி சவச் ...

திருத்தியமைப்பதில் சிரமங்கள் எதிர் நோக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை புதியதொரு குளிரூட்டி இயந்திரத் தொகுதியை இங்கு பொருத்திக் கொள்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக பன்னிரெண்டு லட்சம் ரூபா நிதியொதுக்கப்பட்டது. எனினும் அந்த இயந்திரத்தை கொள்வனவு செய்து யாழ். வைத்தியசாலையில் பொருத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றின் கொழும்பு அலுவலக ஊழியர்கள் மறுப்பு தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றைய மாவட்டங்களில் உள்ளது போன்ற பொலிஸ் சவச்சாலை யாழ். மாவட்டத்திற்கு இல்லாத நிலையில் இருக்கும் ஒரேயொரு சவச்சாலையிலும் சடலங்களை பாதுகாத்து வைக்க முடியாத நிலை காணப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# நுண்கலை அனுமதி பரீட்சை ஒத்திவைப்பு

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த இராமநாதன் நுண்கலைப்பிரிவிற்கான அனுமதிப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். இப் பரீட்சை இருபத்திநான்காம் திகதி பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். செய்முறைப் பயிற்சிபற்றி எழுத்துப்பரீட்சையின்போது அறிவிக்கப்படும்.

# அலுவலகம் இடமாற்றம்

(சரசாலை)

கிளிநொச்சி இராணுவ பொலிஸ் கூட்டு முகாம் வளவில் இயங்கி வந்த பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் பணி திங்கட்கிழமை முதல் பளையில் இயங்க ஆரம்பித்தது. இந்த அலுவலகத்தில் இருந்தே கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிராந்திய நீர்ப்பாசன வேலைகள் கவனிக்கப்படுகின்றன.

அலுவலகம் ஆரம்ப தினத்தன்று கணிசமான தொகை ஊழியர்களும் நீர்ப்பாசன அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். இத்த அலுவலகம் இராணுவ அசம்பாவிதங்களை அடுத்து பளைக்கு மாற்றம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மர்மமான ஒலிபரப்பு

'தமிழீழத்தின் குரல்' என்ற பெயரில் புதிய வானொலி ஒலிபரப்பை நடத்துபவர்கள் இப்பொழுதுதம்மை ''தமிழீழ கம்யூனிஸ்ட் கட்சி''யினர் என அறிமுகப்படுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

எனினும் இவ்வாறான ஒரு பெயரில் அமைப்பொன்றுஇருந்ததாகவோ, இருப்பதாகவோ எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை.

இவ் ஒலிபரப்பின் செய்தி அறிக்கையிலும், விமர்சனத்திலும் விடுதலை இயக்கங்கள் காரசாரமாக விமர்சிக்கப்படுகின்றது.

# மைதானம் திறப்பு விழா

இன்று மாலை நீர்வேலி கந்தசுவாமி கோவில் அலரி பூங்கொல்லைக்கு அருகாமையில் நீர்வேலி விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்படவுள்ளது. நீர்வேலி கிராம அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. இராஜதுரை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய உ. அ. அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# விஞ்ஞானப் பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சை

விஞ்ஞானப் பட்டதாரிகளின் ஆசிரியப்பதவிக்கானநேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 20-ம், 21-ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழுவைச் சேர்ந்த கலாநிதி ஆ. கந்தையா அறிவித்துள்ளார்.

இந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களுக்கு 29-ம் திகதி விசேடமாக நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கே. வி. எஸ். காலமானார்

யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டத்தரணிகளில் ஒருவரான திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் காலமானார். இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும்.

# மின்மாற்றிகள் 3 வெடித்தன

(கரவெட்டி)

நெல்லியடி, மின்சாரசபையின் பராமரிப்பிலுள்ள மூன்று மின்மாற்றிகள் வியாழக்கிழமை பலத்த சத்தத்துடன் வெடித்தன. இதன் சத்தத்திற்குப்பயந்து அண்மைப்பகுதிகளிலுள்ள மக்கள் பீதியடைந்தார்கள். வடமராட்சி பகுதியில் சட்டவிரோத மின்பாவனையாலேயே இவ்வாறு வெடிக்க நேர்ந்தது. இது போன்று சில தினங்களுக்கு முன்பு பருத்தித்துறையிலும் ட்ரான்ஸ்போமர் ஒன்று வெடித்தது.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 16-8-1986 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437